www.Padasalai.Net www.TrbTnpsc.com

மதுரை மாவட்டம் 27.09.2024

# காலாண்டுத் தேர்வு செப்டம்பர் 2024

வகுப்பு : 12

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள்: 90

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20 x 1 = 20)

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
(அ) நிறுமம் (ஆ) அரசு (இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம் (ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

2. முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
(அ) இது நடவடிக்கைகளைபதிவு செய்யும் அறிவியல்தன்மையற்ற முறை
(ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார்கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள்பராமரிக்கப்படுகிறது.
(இ) இது அனைத்து வகையானஅமைப்புகளுக்கும் பொருந்தும்
(ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

3. கடனாளிகள் தொடக்க இருப்பு: ₹ 30,000, பெற்ற ரொக்கம்: ₹ 1,00,000, கடன் விற்பனை: ₹ 90,000; கடனாளிகள் இறுதி இருப்பு:?
(அ) ₹ 30,000 (ஆ) ₹ 1,30,000 (இ) ₹ 40,000 (ஈ) ₹ 20,000

4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில்பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
(அ) வருவாயினத் தன்மைமட்டும் உடையது (ஆ) முதலினத் தன்மைமட்டும் உடையது
(இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மைஉடையது (ஈ) மேற்கண்டஎதுவுமில்லை

5. வருவாய் மற்றும் செலவினக்கணக்கு ஒரு
(அ) பெயரளவுக்கணக்கு (ஆ) சொத்து கணக்கு (இ) ஆள்சார்கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார்கணக்கு

6. ஒரு குறிப்பிட்டநோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு (இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு

7. கூட்டாளிகளுக்கிடையேகூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
(அ) வழங்கப்படுவதில்லை (ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும் (இ) ஆண்டுக்கு 5 % வழங்கப்படும் (ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

8. கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறையின் பற்றப்படும் போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
(அ) கூடுதல் முதல் கொண்டுவந்தது (ஆ) முதல் மீது வட்டி (இ) எடுப்புகள் மீது வட்டி (ஈ) இலாபப் பகிர்வு

9. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தைசமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
(ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்கவேண்டும்.
(இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.
(ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்றகடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

10. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

11. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) உயர் இலாபம் = மொத்தஇலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை (இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின்எண்ணிக்கை
(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம்x கொள்முதல் ஆண்டுகள்

12. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000. சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின்மதிப்பு
(அ) ₹ 40,000 (ஆ) ₹ 70,000 (இ) ₹ 1,00,000 (ஈ) ₹ 30,000

13. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு (இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

14. கூட்டாளி சேர்ப்பின் போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
(அ) அனைத்து கூட்டாளிகள் (ஆ) பழைய கூட்டாளிகள்
(இ) புதிய கூட்டாளி (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

15. பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாபநட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் யோகேஷ்
என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1.
பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
(அ) 1:3 (ஆ) 3:1 (இ) 2:1 (ஈ) 1:2

16. கூட்டாளி ஒருவர் ஜூன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
(அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும் (ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
(இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும் (ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

17. மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
(அ) ஆதாயம் (ஆ) நட்டம் (இ) இலாபம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

18. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(அ) 4:3 (ஆ) 3:4 (இ) 2:1 (ஈ) 1:2

19. கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாத நற்பெயர்
(அ) தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர் (ஆ) வாங்கப்பட்ட நற்பெயர்
(இ) பெறப்பட்ட நற்பெயர் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

20. முதலைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
(அ) லாபம் (ஆ) நட்டம் (இ) பொறுப்புகள் (ஈ) ரொக்கம்

II. ஏவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண். 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)
(7X2=14)

21. நிலை அறிக்கை என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.
23. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
24. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது, பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?
25. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்கமுதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

26. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 18,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

27. பிரியா மற்றும் கவிதா இருவரும் கூட்டாளிகள். பிரியா ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் 4,000 எடுத்துக் கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 6% 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி சராசரி காலமுறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

28. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014: ₹ 10,000; 2015: ₹ 11,000; 2016: ₹ 12,000; 2017: ₹ 13,000 மற்றும் 2018: ₹ 14,000
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

29. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாபநட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்து கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ₹ 42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

30. ரோஸி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் ₹ 45,000 பகிர்ந்துதரா நட்டங்கள் இருப்பைக் காட்டியது. பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

III. <u>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.(வினா எண்.40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)</u>

(7x3=21)

31. பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்:

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக்கடன் | 5,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

32. ஒரு சங்கத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு தோன்றும்? 2016-17 ல் அச்சங்கம் பெற்ற சந்தா ₹ 25,000. இதில் 2015-16 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 2,000 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 1,500 சேர்ந்துள்ளது. 2016-17 ஆம் ஆண்டிற்கான சந்தா ₹ 500 இன்னும் பெற வேண்டியுள்ளது.

33. கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

| விவரம் (31.03.2018) | ₹ |
|---|---|
| அறைகலன் | 50,000 |
| கட்டடம் | 40,000 |
| 2017-18 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது | 10,000 |
| 2018-19 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது | 5,000 |
| கடன் வாங்கியது | 10,000 |
| முதலீடுகள் | 20,000 |
| கை ரொக்கம் | 4,000 |
| வங்கி ரொக்கம் | 6,000 |

34. சிபி மற்றும் மனோஜ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். சிபி எந்தவொரு கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். மனோஜ், அனைத்து கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 60,000. சிபி மற்றும் மனோஜின் கழிவினைக் கண்டுபிடிக்கவும். மேலும் இலாபப் பகிர்வினையும் கணக்கிடவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

35. பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்றஅடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) பயன்படுத்தப்பட்டமுதல்:₹ 2,00,000
(ii) சாதாரண இலாபவிகிதம்15%
(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம்₹ 42,000

36. அருண், பாபு மற்றும் சார்லஸ்மூவரும் கூட்டாளிகள். அவர்கள் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாக பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் துரை என்பவரை 1/4 விகிதத்தில் எதிர்காலஇலாபத்தினை பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். நிறுவனத்தின்நற்பெயர் மதிப்பு ₹ 36,000 என்று மதிப்பிடப்படுகிறது. நற்பெயருக்காகதுரை தமது பங்கின்அளவு தொகைகொண்டு வருகிறார். பழைய கூட்டாளிகள் நற்பெயருக்கானபாதித் தொகையினை எடுத்துக் கொண்டனர். மாறுபடும் முதல் முறையில் ஏடுகள் பராமரிக்கப்படுகின்றனஎனக் கொண்டு தேவையானகுறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

37. இரத்னா, பாஸ்கர், மற்றும் இப்ராஹிம் ஆகியகூட்டாளிகள் 2 : 3 : 4 என்றவிகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018
டிசம்பர் 31 அன்று இரத்னா இறந்துவிட்டார். அவருக்குச் செலுத்தவேண்டிய இறுதித் தொகை ₹ ,00,000 வரவு இருப்பினைக்
காட்டியது. கீழ்கண்டசூழ்நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
(அ) சேர வேண்டியத் தொகைஉடனடியாகக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது
(ஆ) சேர வேண்டியத் தொகைஉடனடியாகச் செலுத்தப்படவில்லை
(இ) ₹ 60,000 காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டது

38. நிலை அறிக்கைமற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையேஉள்ள வேறுபாடுகளைத் தரவும்.
39. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.
40. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (7 x 5 = 35)

41. (அ) டேவிட் முறையான கணக்கேடுகளைப்பராமரிக்கவில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ளவிவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.4.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பலகடனாளிகள் | 84,000 | 1,10,000 |
| பற்பலகடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதலாக ₹ 45,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்த சொந்த பயனுக்காக ₹ 2,500 ஒவ்வொரு மாதமும் எடுத்துக் கொண்டார். மேற்கண்டவிவரங்களைக் கொண்டு இலாபநட்டஅறிக்கையை தயார் செய்யவும்.

(அல்லது)

(ஆ) ஏற்காடு இளைஞர் சங்கத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | சம்பளம் | 14,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 9,600 | அலுவலகச் செலவுகள் | 7,200 |
| புத்தகம் வாங்குவதற்காக | | புத்தகங்கள் வாங்கியது | 15,000 |
| பெற்ற அரசு மானியம் | 10,000 | எழுது பொருள்கள் வாங்கியது | 1,800 |
| சந்தா | 24,800 | செய்தித்தாள் வாங்கியது | 2,100 |
| சேர்க்கைக்கட்டணம் | 2,000 | பரிசுகள் வழங்கியது | 5,000 |
| பரிசுநிதி வரவுகள் | 6,000 | இருப்பு கீ/இ | |
| வங்கி வட்டி | 1,500 | கை ரொக்கம் | 9,900 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 1,100 | | |
| | 55,000 | | 55,000 |

கூடுதல் தகவல்கள்:

(i) தொடக்க முதல் நிதி ₹ 20,000 (ii) புத்தகங்கள் இருப்பு (1.4.2018) ₹ 9,200

(iii) கூடியுள்ள சந்தா பெறப்படாதது ₹ 1,700

(iv) 1.4. 2018 அன்று எழுது பொருள்கள் இருப்பு ₹ 1,200 மற்றும் 31.3.2019 அன்று எழுது பொருள்கள் இருப்பு ₹ 2,000

42 (அ) வன்பொருள் வியாபாரம் செய்துவரும் அருண் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்டதகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 31.12.2017 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| நிலம் மற்றும் கட்டடம் | 2,40,000 | 2,40,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,70,000 |
| கடனாளிகள் | 40,000 | 51,500 |
| கடனீந்தோர் | 50,000 | 45,000 |
| வங்கி ரொக்கம் | 30,000 | 53,000 |

31.12.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் பிற தகவல்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கூலி | 65,000 |
| வெளித் தூக்குக்கூலி | 7,500 |
| பற்பல செலவுகள் | 28,000 |
| கடனீந்தோருக்கு அளித்தரொக்கம் | 6,00,000 |
| எடுப்புகள் | 10,000 |

அவ்வாண்டுக்குரிய மொத்தவிற்பனை ₹ 7,70,000. அவ்வாண்டின் கொள்முதல் திருப்பம் ₹ 30,000 மற்றும் விற்பனைத் திருப்பம் ₹ 25,000. நிலம் மற்றும் கட்டடங்கள் மீது 5% தேய்மானம் நீக்கவும்₹ 1,500 -க்கு ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

(அல்லது)

(ஆ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018 டிசம்பர், 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுது பொருள்கள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| தணிக்கைக்கட்டணம் செலுத்தியது | 2,000 | அறைகலன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக்கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்கஇருப்பு (31.12.2018) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

43. (அ) ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

(i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் பாலா அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

(iii) ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

(iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

(v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

(அல்லது)

(ஆ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

(i) ஈட்டிய இலாபங்கள்: 2016: ₹ 25,000; 2017: ₹ 23,000 மற்றும் 2018: ₹ 26,000.

(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்பநிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.

(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

44. (அ) துரை மற்றும் வேலன் 2018 ஏப்ரல் 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். துரை ₹ 25,000 மற்றும் வேலன் ₹ 30,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

(அ) துரை மற்றும் வேலன் இலாபநட்டங்களை 2:3 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

(ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% தரப்பட வேண்டும்.

(இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது: துரை ₹ 300 மற்றும் வேலன் ₹ 450.

(ஈ) துரைக்கு ஊதியம் ஆண்டுக்கு ₹ 5,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

(உ) வேலனுக்கு தரப்பட வேண்டிய கழிவு ₹ 2,000.

அவ்வாண்டில் வட்டி, ஊதியம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 20,000. இலாபநட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில்கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக்கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |



Padasalai.Net

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| அறைகலன் விற்றது | | இருப்பு கீ/இ | |
| (ஏட்டு மதிப்பு ரூ17,000) | 16,000 | கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

45. (அ) பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) சாதாரண இலாபவிகிதம் 10%

(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ₹ 30,000, ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 45,000.

(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ₹ 30,000 ல் திரும்பத் திரும்பநிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.

(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 3,00,000.

(அல்லது)

(ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | சாந்தி ₹ | சுமதி ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 | 80,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 5,000 | 3,000 |
| 2018, ஜுன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 10,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| 2018 – ல் இலாபப் பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | - |
| கழிவு | - | 1,200 |

46. (அ) சாய் மற்றும் சங்கர் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அந்நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | | ₹ | சொத்துகள் | | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | | 34,000 |
| சாய் | 48,000 | | அறைகலன் | | 6,000 |
| சங்கர் | 40,000 | 88,000 | முதலீடுகள் | | 20,000 |
| கடனீந்தோர் | | 37,000 | கடனாளிகள் | 40,000 | |
| கொடுபடவேண்டிய கூலி | | 8,000 | கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு | 3,000 | 37,000 |
| | | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | | 12,000 |
| | | | சரக்கிருப்பு | | 16,000 |
| | | | வங்கி | | 8,000 |
| | | 1,33,000 | | | 1,33,000 |

2017, டிசம்பர் 31 இல் சண்முகம் என்பவர் 1/4 இலாபப்பகிர்வு விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார். அவர் பின்வரும் சரிகட்டுதலுக்குட்பட்டு ₹ 12,000 முதலாக கொண்டு வருகிறார்.

(அ) அறைகலன் ₹ 6,000 மற்றும் கட்டடம் ₹ 50,000 ஆகவும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 5,500 ஆக உயர்த்த வேண்டும்.

(இ) பதிவுறாத ₹ 6,000 மதிப்புள்ள முதலீடு கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.

(ஈ) பதிவுறாத ₹ 2,500 மதிப்புள்ள பொறுப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

குறிப்பேட்டுப் பதிவுகளைத்தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்னுள்ள முதல் கணக்கினையும் பதிவு செய்யவும்.

(அல்லது)

(ஆ) இராணி, ஜெயா மற்றும் ரதி என்றகூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 2:2:1என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர்.
31.3.2018 அன்று ரதி என்பவர்கூட்டாண்மையைவிட்டு விலகினார்.
முந்தையஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு: 2014: ₹ 10,000; 2015: ₹ 20,000; 2016: ₹ 18,000 மற்றும் 2017: ₹ 32,000
2018 ஆம் ஆண்டில் கூட்டாளி விலகல் நாள் வரையிலானஇலாபத்தில் ரதிக்குரிய இலாபப் பங்கினை கீழ்க்கண்ட நிலைகளில் தயாரிக்கவும்.
(i) இலாபம் முந்தைய ஆண்டுகளின் இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதாக இருந்தால்.
(ii) இலாபம் கடந்தநான்கு ஆண்டுகளின்சராசரி இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுவதாக இருந்தால்.
மேலும் மாறுபடும் முதல் முறைஎனக்கொண்டு தேவையானகுறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

47. (அ) ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே2:1 எனும் விகிதத்தில் இலாபநட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 நெல்சன்என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்டசரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.
(i) சரக்கிருப்பு மதிப்பை ₹ 5,000 உயர்த்த வேண்டும்
(ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹ 7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்
(iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 10,000 குறைக்க வேண்டும்
(iv) கொடுபடாமலுள்ள கூலி ₹ 9,500 க்கு வகை செய்ய வேண்டும். குறிப்பேடு பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும்.
(அல்லது)
(ஆ) சார்லஸ், முத்து மற்றும் சேகர் என்ற கூட்டாளிகள் முறையே 3:4:2 என்ற விகிதத்தில் இலாபங்களைப் பகிர்ந்து கொண்டனர். 2018
டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | அறைகலன் | 20,000 |
| சார்லஸ் 30,000 | | | சரக்கிருப்பு | 40,000 |
| முத்து 40,000 | | | கடனாளிகள் | 30,000 |
| சேகர் | 20,000 | 90,000 | வங்கி ரொக்கம் | 42,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 27,000 | இலாபநட்டக/கு (நட்டம்) | 18,000 |
| பற்பல கடனீந்தோர் | | 33,000 | | |
| 1,50,000 | | | 1,50,000 | |

1.1.2019 அன்று பின்வரும் ஏற்பாடுகளின்படி சார்லஸ் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.
(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% அதிகரிக்கப்படவேண்டும்
(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்படவேண்டும்
(iii) வாராக்கடன் மீது ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்
(iv) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவு ₹ 11,000 இன்னமும் பதியப்படவில்லை
(v) சார்லஸிற்கு உரியத் தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது
மறுமதிப்பீட்டுக் கணக்கு விலகலுக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.



Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**+2 கணக்குப்பதிவியல் காலாண்டுத்தேர்வு செப்- 24**

**சரியான விடை 20X1=20**

1. (இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்
2. (இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
3. (ஈ) ரூ 20000
4. (இ) வருவாய் மற்றும் முதலின தன்மையுடையது
5. (அ) பெயரளவு கணக்கு
6. (ஆ) முதலின வரவு
7. (அ) வழங்கப்படுவதில்லை
8. (அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது
9. (ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்
10. (ஈ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
11. (இ)**உயர் இலாபம்=சராசரி இலாபம் - சாதாரண இலாபம்**
12. (ஈ) ரூ 30000
13. (ஆ) பெயரளவு க/கு
14. (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்
15. (ஈ) 1:2
16. (இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
17. (ஆ) நட்டம்
18. (இ) 2:1
19. (அ) தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர்
20. (இ) பொறுப்புகள்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

21. **நிலை அறிக்கை:** ஒரு குறிப்பிட்ட நாளுக்கான முதலை கணக்கிட தயாரிக்கப்படுகிறது. இவை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் அறிக்கை. இது இருப்புநிலைக்குறிப்பு போன்றது.

22. **இலாப நோக்கமற்ற அமைப்பின் பொருள்** இலாபம் நோக்கம் இல்லாமல் பொது மக்களுக்கு சேவை நோக்கத்தோடு செயல்படக்கூடிய நிறுவனங்களுக்கு இலாப நோக்கமற்ற அமைப்பு என்று பெயர். எகா:- கலை, பண்பாடு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைப்புகள், அறக்கொடை, கல்வி, மருத்துவமனை, மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் போன்ற நிறுவனங்கள்.

23. **கூட்டாளி விலகல்:** கூட்டாண்மையிலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும். காரணங்கள்:- உடல்நிலை பாதிப்பு, முதுமை, கருத்து வேறுபாடுகள் முதலியன கூட்டாளி விலகுவதற்கான காரணங்களாகும்.

24. **புதிய கூட்டாளி சேர்க்கையின் போது, பகிர்ந்துதரா இலாப மற்றும் நட்டம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது?** இலாபம் அல்லது நட்டம் பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

25. **இலாப நட்ட அறிக்கை**

| | |
|---|---|
| இறுதி முதல்<br>கூட்டுக:- எடுப்புகள் | 80000<br>15000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 95000<br>30000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல்<br>கழிக்க:- **தொடக்க முதல்** | 650000<br>**90000** |
| நட்டம் | 25000 |

26. **மார்த்தாண்டம் பெண்கள் வருவாய் செலவினக் கணக்கு**

| செலவுகள் | தொ | தொ | வரு | தெ | தெ |
|---|---|---|---|---|---|
| விளையாட்டு பொருள் தொ.இ | 16000 | | | | |
| கூட்:- நடப்பாண்டில் வாங்கி | 84000 | | | | |
| | 10000 | | | | |
| கழி:- விளை.பொ.இறுதி இருப் | 10000 | | | | |
| | | **90000** | | | |

**மார்த்தாண்டம் பெண்கள் இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்பு | | தொ | சொத்துக்கள் | தொ | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | வி.பொ. இறுதி இ | | 10000 |

27.**பிரியாவின் காலாண்டின் இறுதியில்** எடுப்பு எடுத்திருந்தால்
4000 X 4 = 16000 x 6/100 x4.5/12 = **360**

28. சராசரி லாபம் = மொத்த லாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

=(10000 +11000 +12000 + 13000 +14000)/5 = 60000/5 = **12000**

நற்பெயர் =சராசரி லாபம் Xகொ.ஆ.எ = 12000 X 2 = **24000**

29. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | பொதுகாப்பு க/கு | ப | 42000 | |
| | அருள் முதல் க/கு | | | 24000 |
| | அனிதா முதல் க/கு | | | 18000 |

30. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | ரோஷி முதல் க/கு | ப | 15000 | |
| | ரதி முதல் க/கு | ப | 15000 | |
| | ராணி முதல் க/கு | ப | 15000 | |
| | லாப நட்ட க/கு | | | 45000 |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

31. **மொத்தக் கடனாளிகள் கணக்கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ<br>**விற்பனை க/கு** | 50000<br>**190000** | ரொக்க க/கு<br>உள்திருப்பக்க/கு<br>வாராக்கடன்க/கு<br>இருப்புகீ/இ | 150000<br>15000<br>5000<br>70000 |
| | 240000 | | 240000 |

**மொத்த விற்பனை** = ரொக்கவிற்பனை+கடன் விற்பனை
140000 + 190000 = **330000**

32. **2017 மார்ச் வருவாய் செலவினக் கணக்கு**

| செ | தொ | தொ | வருமானம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | சந்தா | 25000 | |
| | | | (-)15-16. சந்தா | 2000 | |
| | | | | 23000 | |
| | | | (-) 17-18 சந்தா | 1500 | |
| | | | | 21500 | |
| | | | **(+)16-17 பெ. சந்** | **500** | **20500** |

**இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ | தொ | சொத்துக் | | தொகை |
|---|---|---|---|---|---|
| 17-18ச.மு.பெ | | 1500 | 16-17 பெ.வே.ச | | 500 |

33. **2018 மார்ச 31ம் நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| **முதல் நிதி** | **115000** | கட்டடம் | 40000 |
| கடன் வாங்கியது | 10000 | அறைகலன் | 50000 |
| மு.கூ.பெ.சந்தா | 5000 | முதலீடுகள் | 20000 |
| | | சந்தா பெ.வேண்டி | 10000 |
| | | வங்கி ரொக்கம் | 6000 |
| | | கை ரொக்கம் | 4000 |
| | **130000** | | **130000** |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**34.** **சிபியின் கழிவுகணக்கிடல் மனோஜின் கழிவு கணக்கிடல்**

60000 x 20/100 = 12000 48000 x 20/100 = 8000

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 | இலாபநட்ட பகிர்வு க/கு ப | 20000 | |
| டிசம் | சிபி கழிவு க/கு | | 12000 |
| 31 | மனோஜ் கழிவு க/கு | | 8000 |

**35.** பயன்படுத்தப்பட்ட முதல் = **200000**

சாதாரண இலாபம்=பயன்படுத்தப்பட்டமுதல்Xசாதாரண லாபவிகிதம்

= 200000 X $\frac{15}{100}$ = **30000**

உயர் இலாபம் = சராசரிஇலாபம் - சாதாரணலாபம்

= 42000 - 30000 = **12000**

நற்பெயர் = உயர் லாபம் X கொ.ஆ.எ = 12000 X 3= **36000**

**36.** **குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | வங்கி க/கு ப | 9000 | |
| | அருண் முதல் க/கு | | 3000 |
| | பாபு முதல் க/கு | | 3000 |
| | சார்லஸ் முதல் க/கு | | 3000 |
| | அருண் முதல் க/கு ப | 3000 | |
| | பாபு முதல் க/கு ப | 3000 | |
| | சார்லஸ் முதல் க/கு ப | 3000 | |
| | வங்கி க/கு | | 9000 |

**37.** **குறிப்பேட்டுப் பதிவு**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| இரத்தினாவின் நிறைவேற்றாளர் க/கு ப | 100000 | |
| வங்கி க/கு | | 100000 |
| இரத்தினாவின் நிறைவேற்றாளர் க/கு ப | 100000 | |
| இரத்தினாவின் நிறைவேற்றாளர் கடன் க/கு | | 100000 |
| இரத்தினாவின் நிறைவேற்றாளர் க/கு ப | 100000 | |
| வங்கி க/கு | | 60000 |
| இரத்தினாவின்நிறைவேறறாளர்கடன்க/கு | | 40000 |

| 38. அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| நோக்கம் | முதலை கண்டறிய | நிதிநிலையை கண்டறிய |
| கணக்கியல் முறை | இரட்டைப் பதிவு முறை பின்பற்றாத போது நிலை அறிக்கை பின்பற்றப்படுகிறது. | இரட்டைப்பதிவு முறையின் போது இருப்புநிலைக் குறிப்பு பின்பற்றப்படுகிறது. |
| தயாரிப்பின் அடிப்படை | முழுமையான பேரேட்டுக் கணக்குகளின் தயாரிக்கப்படுவது இல்லை. | முழுமையான பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. |
| நம்பகத் தன்மை | நம்பகத் தன்மை இல்லை | நம்பகத்தன்மையுடையது. |
| விடுபட்ட விவரங்கள் | விடுபட்ட விவரங்களை கண்டறிவது கடினம் | விடுபட்ட விவரங்களை கண்டறிவது எளிது |

| 39. அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| **கணக்கின் எண்ணிக்கை** | இரண்டு கணக்குகள் 1. முதல் க/கு 2. நடப்பு க/கு | ஒரே ஒரு கணக்கு. முதல் கணக்கு மட்டும். |
| **முதல் தொகையில் மாற்றம்** | முதல் மாறாது (கூடுதல் அல்லது நிரந்தர எடுப்பின் போது மட்டும் மாறும்.) | முதல் தொகை மாறும் |
| **இறுதி இருப்பு** | முதல் க/கு வரவு இருப்பு மட்டும் நடப்பு க/கு பற்று அல்லது வரவு இருப்பைக் காட்டும் | எப்போதும் முதல் க/கு வரவு இருப்பாகும் |
| **சரிக்கட்டுதல்கள்** | அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்பு கணக்கில் சரி செய்யப்படும். | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல்கணக்கில்சரிசெய்யப்படும். |

**40. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.** எதிர்காலத்தில் இலாபம் ஈட்டும் திறன் கொண்ட நிறுவனம்.

**நிறுவனத்தின் அமைவிடம்:-** வாடிக்கையாளர் அதிகம் சென்றடைக்கூடிய இடம்.

**நிறுவனத்தின் கால அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**போட்டியின் அளவு:-** போட்டிகள் இல்லாத அல்லது போட்டி குறைவான நிறுவனம்.

**பிற காரணிகள்:-** உரிமையாளரின் பிரபலம், விளம்பரம் போன்றவைகள். திறமை மிகு மேலாண்மை.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. (தொடக்க முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 9,000 | ரொக்கம் | 43,000 |
| கடன் | 25,000 | சரக்கிருப்பு | 1,20,000 |
| முதல் | 4,00,000 | கடனாளிகள் | 84,000 |
| | | வணிக வளாகம் | 2,50,000 |
| | | அறைகலன் | 33,000 |
| | 5,30,000 | | 5,30,000 |

**(இறுதி முதல் கணக்கிடுதல்)**

| பொறுப்புகள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 1,02,000 | ரொக்கம் | 29,000 |
| கடன் | 20,000 | சரக்கிருப்பு | 1,30,000 |
| முதல் | 4,42,000 | கடனாளிகள் | 1,10,000 |
| | | வணிக வளாகம் | 2,50,000 |
| | | அறைகலன் | 45,000 |
| | 5,64,000 | | 5,64,000 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### இலாப நட்ட அறிக்கை

| | |
|---|---|
| இறுதி முதல் (31.03.2017)<br>கூட்டுக:- எடுப்புகள் | 4,42,000<br>30,000 |
| கழிக்க:- கூடுதல் முதல் | 4,72,000<br>45,000 |
| சரிக்கட்டப்பட்ட இ.முதல்<br>கழிக்க:- தொடக்க முதல் | 4,27,000<br>4,00,000 |
| **இலாபம்** | **27,000** |

### 41.ஆ.ஏற்காடு இளைஞர்சங்கத்தின் வருவாய் செலவினக்கக

| செலவுகள் | தொ | தொ | வருமானம் | | தொகை |
|---|---|---|---|---|---|
| சம்பளம் | | 14000 | சந்தா | 24800 | |
| அலுவ.செலவு | | 7200 | கூட்:- பெறவே | 1700 | 26500 |
| எழுதுபொ.தொ. | 1200 | | சேர்க்கை கட் | | 2000 |
| கூட்:- வாங்கி | 1800 | | வங்கி வட்டி | | 1500 |
| | 3000 | | ப.செய்.தா.விற் | | 1100 |
| கழி:- வி.போ.இ | 2000 | | | | |
| | | 1000 | | | |
| செய்தித்தாள் | | 2100 | | | |
| **உபரி** | | **6800** | | | |
| | | **31100** | | | **31100** |

### 42.அ. அருண் என்பவரின் ஏடுகளில் 2017,டிசம்பர் 31ஆம் நாளைய நிலை அறிக்கை

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| கடனீந்தோர்<br>தொடக்க முதல் | 50000<br>380000 | நி.ம.கட்டிடம்<br>சரக்கிருப்பு<br>கடனாளிகள்<br>வ.ரொக்கம் | 240000<br>120000<br>40000<br>30000 |
| | 430000 | | 430000 |

### மொத்த கடனீந்தோர் கணக்கு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| ரொக்க க/கு<br>கொ.திருப்பக/கு<br>இருப்புகீ/இ | 600000<br>30000<br>45000 | இருப்புகீ/கொ<br>கொள்முதல்க/கு | 50000<br>625000 |
| | 675000 | | 675000 |

### வியாபார இலாபநட்ட கணக்கு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| தொ.சரக்கிருப்பு<br>கொள் 6250000<br>திருப்ப 30000<br>கூலி<br>**மொ.இலாபம்** | 120000<br><br>595000<br>65000<br>**135000** | விற்ப 770000<br>(-)திரு 25000<br>இ.சரக்கிருப்பு | <br>745000<br>170000 |
| | 915000 | | 915000 |
| வெ.கூலி<br>ப.செலவுகள்<br>தேய்மானம்<br>ஐயக்கடன்<br>**நிகர லாபம்** | 7500<br>28000<br>12000<br>1500<br>**86000** | மொ.இலாபம் | 135000 |
| | **135000** | | **135000** |

### 2018, டிசம்பர் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ | சொத்துக்கள் | ரூ |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 45000 | இ.சரக்கு | 170000 |
| முதல் 380000<br>(+)நி.லா 86000<br><br>466000<br>(-) எடுப் 10000 | <br><br><br><br>456000 | வ.ரொக்கம்<br>கடனாளிகள்51500<br>(-) ஒதுக்கு 1500<br>நி.ம. கட்டி 240000<br>(-) தே 12000 | 53000<br><br>50000<br><br>228000 |
| | **501000** | | **501000** |

### 42.ஆ. மதுரை அன்னை பெறுதல் செலுத்தல் கணக்கு

| பெறுதல்கள் | | தொ | செலுத்தல்கள் | தொ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ.்.கொ | | | எழுதுபொ.வா | 6000 |
| கை ரொக்கம் | 2000 | | தணிக்கை கட் | 2000 |
| வங்கி | 3000 | 5000 | பல்வகை செல | 6000 |
| ப.செய்தி தாள் வி | | 500 | உதவி தொ.அ | 2000 |
| நுழைவு கட்டணம் | | 3000 | தீ.கா.முனைமம் | 1500 |
| மு.மீதான வட்டி | | 2000 | அறைகலன் வா | 6000 |
| சந்தா பெற்றது | | 8500 | செய்திதாள் வா | 700 |
| அறைகலன் விற் | | 4000 | போக்குவர செ | 1000 |
| வ.மே.பற்று | | 4700 | **இருப்பு கீ.்.இ** | |
| | | | **ரொக்கம்** | **2500** |
| | | **27700** | | **27700** |

**43.அ.** 1) எந்த ஒரு கூட்டாளிக்கும் முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை. எனவே ஆகாஷ் முதல் மீது வட்டி பெற உரிமை உடையவரல்ல.

2) கூட்டாளியின் எடுப்புகளுக்கு வட்டி விதிக்கக் கூடாது. ஆகையால் பாலா எடுப்பு மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை.

3) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (ஆ)ன் படி இலாபம் சமமாகப் பகிரிந்தளிக்க வேண்டும்.

4) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (அ)ன் படி எந்த கூட்டாளிக்கும் ஊதியம் வழங்க தேவையில்லை. ஆகையால் டேனியல் ஊதியம் பெற தகுதி உடையவரல்ல.

5) கூட்டாண்மை ஒப்பாவணம் பிரிவு 13 (ஈ)ன் படி கடன் மீது வட்டி ஆண்டு 6% செலுத்தப்பட வேண்டும். ஆகையால் சந்துரு தான் வழங்கிய 50000 கடனுக்கு ஆண்டுக்கு 6% சதவீத வட்டி பெறலாம்.

### 43.ஆ. சரிக்கட்டபட்ட லாபம் கணக்கிடுதல்

| விவரம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| இலாபம் | 25000 | 23000 | 26000 |
| கழி:-திரும்ப நிகழா வருமானம் | 2500 | --- | --- |
| | 22500 | 23000 | 26000 |
| கூட்:-தீயினால் சேதமடைந்த சர | --- | 3500 | --- |
| **சரிக்கட்டபட்ட பின் லாபம்** | **22500** | **26500** | **26000** |

சராசரி லாபம் $= \frac{\text{மொத்த லாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{22500+26500+26000}{3} = \frac{75000}{3} = 2500$

காப்பீட்டுமுனைமம் சரிகட்டுவதற்கு முன்லாபம் = 25000-250=24750

சராசரி லாபம் $= \frac{40000}{4} = \mathbf{10000}$

நற்பெயர் = சராசரி லாபம் X கொ.ஆ.எ= 24750 X 2 = **49500**

### 44.அ. 2019மார்ச்31ம்நாளோடு முடிவ இலாபநட்டபகிர்வு கக

| விவரம் | தொ | தொ | விவரம் | தொகை |
|---|---|---|---|---|
| மு.மீது.வட்டி | | | இலாபநட்ட கக | 20000 |
| துரை | | 1250 | எடுப்புமீதான வ | |
| வேலன் | | 1500 | துரை | 300 |
| கூட்டாளிமுதல் | | | வேலன் | 450 |
| **துரை** | **4400** | | | |
| **வேலன்** | **6600** | **11000** | | |
| | | **20750** | | **20750** |

### 44.ஆ. .தென்காசிதிருவள்ளுவர் வருவாய் செலவினக்கணக்கு

| செலவுகள் | தொகை | வருமானம் | தொகை |
|---|---|---|---|
| சம்பளம் | 20000 | வட்டி பெற்றது | 5000 |
| வாடகை | 24000 | சந்தா | 55000 |
| பயணச் செலவு | 2000 | நுழைவுகட்டணம் | 7000 |
| அச்சு எழுதுபொ | 6000 | | 1800 |
| அறை.விற்.நட்டம் | 1000 | | |
| **உபரி** | **14000** | | |
| | **67000** | | **67000** |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**45.அ.** சராசரி லாபம் = மொத்த லாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

=(30000-3000)+40000+50000+45000 / 3 = 162000 / 4 **= 40500**

சாதாரண இலாபம்=பயன்படுத்தப்பட்டமுதல்Xசாதாரணலாப விகிதம்

= 300000 X 10 / 100 **= 30000**

உயர் இலாபம் = சராசரிஇலாபம் - சாதாரண லாபம்

= 40500 - 30000 **= 10500**

நற்பெயர் = உயர் லாபம் / சாதாரண லாப விகிதம் X 100 = 10500 / 10 X 100 **= 105000**

**45.ஆ,** **கூட்டாளிகளின் நிலை முதல் க/கு**

| நா | விவர | சாந்தி | சுமதி | நாள் | விவரம் | சாந்தி | சுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| மா31 | **இகீ/இ** | **110000** | **100000** | 1.4.18 | இகீ/கெ | 100000 | 80000 |
| | | | | | வங்கி | 10000 | 20000 |
| | | **110000** | **100000** | | | **110000** | **100000** |
| | | | | **1.4.19** | **இகீ/கொ** | **110000** | **100000** |

**கூட்டாளிகளின் நடப்பு முதல் க/கு**

| நாள் | விவரம் | சாந்தி | சுமதி | நாள் | விவரம் | சாந்தி | சுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| டி 31 | எடுப்பு | 20000 | 13000 | 1.1.18 | இகீ/கெ | 5000 | 3000 |
| | எடு.வட் | 500 | 300 | | லாபம் | 10000 | 8000 |
| | **இகீஇ** | **9800** | **4300** | | முமீவட் | 6300 | 5400 |
| | | | | | சம்பளம் | 9000 | |
| | | | | | கழிவு | | 1200 |
| | | **30300** | **17600** | | | **30300** | **17600** |
| | | | | 1.1.19 | **இகீ/கொ** | **9800** | **4300** |

**46.அ.** **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | கட்டிடம் க/கு ப | 16000 | |
| | முதலீடுகள் க/கு ப | 6000 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 22000 |
| | மறுமதிப்பீடு க/கு ப | 6000 | |
| | அறைகலன் க/கு | | 1000 |
| | வாராஐயக்கடன் க/கு | | 2500 |
| | பதிவுறா பொறுப்பு க/கு | | 2500 |
| | மறுமதிப்பீடு க/கு ப | 16000 | |
| | சாய் முதல் க/கு | | 10000 |
| | சங்கர் முதல் க/கு | | 6000 |

**மறுமதிப்பீடு க/கு**

| விவரம் | தொ | விவரம் | தொ |
|---|---|---|---|
| அறைகலன் க/கு | 1000 | கட்டிடம் க/கு | 16000 |
| வாராஐயக்கடன் க/கு | 2500 | முதலீடுகள் க/கு | 6000 |
| பதிவுறா பொறுப்பு | 2500 | | |
| **மறுமதிப்பீடு லாபம்** | **16000** | | |
| | 22000 | | **22000** |

**முதல் க/கு**

| விவரம் | சாய் | சங்கர் | சண்மு | விவரம் | சாய் | சங்கர் | சண்மு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | இகீகொ | 48000 | 40000 | |
| இகீஇ | 58000 | 46000 | 12000 | ம.மதிப் | 10000 | 6000 | |
| | | | | வங்கி | --- | --- | 12000 |
| | 58000 | 46000 | 12000 | | 58000 | 46000 | 12000 |
| | | | | இகொ | 58000 | 46000 | 12000 |

**46.ஆ.** **குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | லாபந அனாமத்துக/கு ப | 1600 | |
| | ரதி முதல் க/கு | | 1600 |

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | லாபந அனாமத்துக/கு ப | 1000 | |
| | ரதி முதல் க/கு | | 1000 |

**47.அ.** குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | சரக்கிருப்புக/கு ப | 5000 | |
| | முதலீடுகள் க/கு ப | 7000 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 12000 |
| | மறுமதிப்பீடு க/கு ப | 19500 | |
| | அலுகலக சாதனம் க/கு | | 10000 |
| | கொடு.பட.கூலி க/கு | | 9500 |
| | ஸ்ரீராம் முதல் க/கு ப | 5000 | |
| | ராஜ் முதல் க/கு ப | 2500 | |
| | மறுமதிப்பீடு க/கு | | 7500 |

மறுமதிப்பீடு க/கு

| விவரம் | தொ | விவரம் | தொ |
|---|---|---|---|
| அலுவலக சாத க/கு | 10000 | சரக்கிருப்பு க/கு | 5000 |
| கொ.ப.வே.கூலி க/கு | 9500 | முதலீடுகள் க/கு | 7000 |
| | | **மறுமதிப்பீடு நட்டம்** | **7500** |
| | **19500** | | **19500** |

**47.ஆ.** **மறுமதிப்பீடு க/கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| அறைகலன் | 1000 | சரக்கிருப்பு | 4000 |
| வாரா ஐயக்கடன் | 1000 | **மறு நட்டம** | **9000** |
| கொவேபமுது | 11000 | | |
| | **13000** | | **13000** |

**முதல் க/கு**

| விவரம் | சார்லஸ் | முத்து | சேகர் | விவரம் | சார்லஸ் | முத்து | சேகர் |
|---|---|---|---|---|---|---|---|
| லாபநட் | 6000 | 8000 | 4000 | இகொ | 30000 | 40000 | 20000 |
| மறுமதி | 3000 | 4000 | 2000 | ஈட்டுநிதி | 9000 | 12000 | 6000 |
| வங்கி | 30000 | | | | | | |
| **இருகீஇ** | | **40000** | **20000** | | | | |
| | **39000** | **52000** | **26000** | | **39000** | **52000** | **26000** |
| | | | | **இகொ** | | **40000** | **20000** |

**இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புக | தொ | தொ | சொத்துக்கள் | தொ | தொ |
|---|---|---|---|---|---|
| முதல் | | | அறைகலன் | 20000 | |
| முத்து | 40000 | | - தேய் | 1000 | 19000 |
| சேகர் | 20000 | 60000 | சரக்கிருப்பு | 40000 | |
| கடனீந்தோ | | 33000 | மதிப்பே | 4000 | 44000 |
| கொவேபமு | | 11000 | கடனாளி | 30000 | |
| | | | கழி:- வா.ஐ. | 1000 | 29000 |
| | | | வங்கி | 42000 | |
| | | | க:- சார்லமு | 30000 | 12000 |
| | | **104000** | | | **104000** |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com